# பொதுக்காலத்தின் இருபத்துமூன்றாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - A

# 2023-09-10

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து வாசகம்* 33: 7-9,

*திருப்பாடல்* 95: 1-2. 6-7. 8-9 ,

*திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 13: 8-10 ,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 18: 15-20)

*திருப்பலி முன்னுரை*

*நன்மைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்துமூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். பிறரது குற்றங்களைச் சுட்டிக்காட்டி, அவர்களை நல்வழிப்படுத்த இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நமக்கு எதிராக ஒருவர் குற்றம் செய்தால், அவருடன் தனியாக இருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுமாறு இயேசு கூறுகிறார். கிறிஸ்தவர்கள் இடையே எழும் பிரச்சனைகளை திருச்சபைக்குள்ளே தீர்த்துக்கொள்ள வேண்டுமென நமக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. மேலும் ஒரு நற்கார யத்துக்காக இருவர் மனமொத்து வேண்டினால், கடவுள் நமக்கு தருவார் என்ற உறுதியை இன்றைய நற்செய்தி தருகிறது. கிறிஸ்து இயேசுவின் பெயரால் ஒன்றிணைந்து ஆண்டவரின் மாட்சியைக் காண வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*நல்லாயராம் இறைவா,*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், தீய வழியில் செல்லும் மக்களை எச்சரித்து நல்வழியில் நடத்துவர்களாய் திகழ வரம் அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*நல்லரசராம் இறைவா,*

*உலக நாடுகளை வழிநடத்தும் தலைவர்கள், மக்களிடையே ஒற்றுமையை உருவாக்கவும், பிறநாடுகளுடன் நல்லுறவை வளத்துக்கொள்ளவும் துணை புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*ஆறுதலின் அரசரே இறைவா,*

*உம் திருமகனின் சிலுவைப் பாடுகளில் பங்குபெறும் வகையில் உலகெங்கும் துன்புறும் கிறிஸ்தவர்கள், உமது மாட்சியால் பாதுகாப்பு பெறவும், பிறரின் மனமாற்றத்துக்கு தூண்டுதலாகத் திகழவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா!*

*எம் நாட்டை ஆட்சி செய்யும் தலைவர்கள் சமய சுதந்திரத்தை மதிக்கவும், மக்களிடையே பிரிவினை மற்றும் கலவரம் ஏற்படாமல் தடுக்கவும் உதவி செய்யுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*ஆற்றல் மிகு தந்தையே இறைவா!*

*எம் இளையோர் அனைவரும் உம் தெய்வீக அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு உலகத்தின் பிழையான ஈர்ப்பினாலே தடம் புரண்டு செல்லாது நல்வாழ்வு வாழ்ந்து வளர அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!*

*மணிப்பூர் மாநிலத்தில் உம் மகன்மீது நம்பிக்கைக்கொண்டோரின் மீது நடத்தப்படும் வன்முறையிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் காத்தருளும். அந்த வன்முறையாளர்கள் தங்கள் தவறுகளைக் கைவிட்டு மனிதநேயத்துடன் நடந்துகொள்ள அவர்களுக்கு நல்மனதினைத் தாரும். அரசியல்வாதிகள் சுயநலத்தைக் களைந்து விட்டு அனைவரையும் சமசாக நடத்த தேவையான மாற்றங்களைச் செய்யத் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*என்றும் எம்மை ஆட்சிச் செய்யும் எம் இறைவா!*

*'நான் உங்கள் அடிமை' என்றும், 'நான் உங்கள் பணியாளன்' என்றும் மேடையில் முழங்கிக் கொண்டு, அதற்கு எதிர் மாறாகச் செயலாற்றும் தலைவர்கள், ஒருவருக்குத் தரப்படும் அதிகாரம், அடுத்தவரை அடக்கி ஆள்வதற்கு அல்ல, மாறாக, அடுத்தவருக்குப் பணிச் செய்வதற்கே என்பதை உணர்ந்து அதிகாரத்தின் உண்மையான அர்த்தத்தைச் சிந்திக்க அதன்படி மக்களுக்குப் பணியாற்றத் தேவையான ஞானத்தை அருள இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.*